**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

------------

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No.I, PERAMBALUR**

| | | |
|---|---|---|
| Case Number | : | C.C.No. 251/2023 |
| Prosecution Witness | : | **அ.சா.**5 |
| Name | : | **ராஜேந்திரன்** |
| Father's / Husband Name | : | **கிருஷ்ணசாமி** |
| Address | : | **அத்தியூர்** |
| Age | : | 72/2025 |

**தேதி : 18.06.2025**

சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திரு.S. தினேஷ் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் அத்தியூரில் வசித்து வருகிறேன். நான் காண்ட்ராக்ட் வேலை செய்து வருகிறேன். சாட்சி நல்லு என்பவரை தெரியும். எதிரி பச்சமுத்துவை தெரியாது. என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். என்னுடன் நல்லு என்பவரும் கையொப்பம் செய்தார். மேற்படி கையொப்பத்தை 27.03.2011ம் தேதி செய்தேன். போலீஸார் எங்கள் முன்னிலையில் யாரையும்கைது செய்யவில்லை. எந்த ஆவணங்களையும் கைப்பற்றவில்லை. கையெழுத்தை எங்கு வைத்து போட்டேன் என்று ஞாபகமில்லை. குற்றபிரிவு அலுவலகத்தில் வைத்து போட்டதாக ஞாபகம் உள்ளது. பேோஸார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வைத்த கோரிக்கையை ஏற்று சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவித்து அரசு தரப்பு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது.

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போலீஸார் என்னை விசாரித்ததாகவும், கடந்த 23.07.2011ம் தேதி ஆவடியை சேர்ந்த நல்லு என்பவரது நிலங்களை மோசடியாக விற்ற எதிரி பச்சமுத்துவை தானும், சாட்சி நல்லுவும் அடையாளம் காட்டியதாகவும், அவரை கைது செய்யும்போது உடனிருந்ததாகவும், மேலும் எதிரி சோமண்டாபுதூரில் உள்ள அவருடைய வீட்டிலிருந்து பத்திர ஆவணங்கள் 389/2010, 7953/2011 மற்றும் 3702/2011 ஆகியவற்றை மதியம் 2.30 மணிக்கு போலீஸார் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியதாக கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என் முன்பாக எதிரி கைது செய்யப்படவில்லை, எவ்வித ஆவணமும் கைப்பற்றவில்லை என்பதுதான் உண்மை என்றால் சரிதான்.

Taken down by / before me in open court
read over / interpreted to the witness
in the presence of the accused / accused/
pleader and admitted by the witness to be
correct

Sd/-.
Judicial Magistrate No.1
Perambalur.